# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

### எழுத்தறிவுப் போட்டிகளின் விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) கீழ்ப்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(6-8 வயது): இது ஒரு மணி நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வகையான கேள்விகளும் வேறுசில கேள்விகளும் இந்தப் பரீட்சையில் இடம்பெறலாம்.
2) மத்தியபிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(8-10 வயது): இது 1.30 மணி நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வகையான கேள்விகளும் வேறுசில கேள்விகளும் இந்தப் பரீட்சையில் இடம்பெறலாம்.
3) மேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(10-13 வயது): இது 1.30 மணி நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வகையான கேள்விகளும் வேறுசில கேள்விகளும் இந்தப் பரீட்சையில் இடம்பெறலாம்.
4) அதிமேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(13-18 வயது): இது 1.30 மணி நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வகையான கேள்விகளும் வேறுசில கேள்விகளும் இந்தப் பரீட்சையில் இடம்பெறலாம்.
5) **விஷேட அதியுயர் திறமை எழுத்தறிவுப் போட்டி: (1.30 மணி நேரப் பரீட்சை).** பதினெட்டு வயதிற்கு உட்பட்ட எவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

   போட்டி இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

<u>முதல் பகுதியில்</u> **உள்ள 50 வினாக்களில், முதல்** 40 வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் நான்கு விடைகள் கொடுக்கப்படும். அவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடையாளமிடும் படி கேட்கப்படுவர். அடுத்துள்ள 10 வினாக்கள் கோடிட்ட இடங்களை நிரப்புவனவாக அமைந்திருக்கும். போட்டியாளர்கள் கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதும்படி கேட்கப்படுவர்.

<u>இரண்டாவது பகுதியில்,</u> கொடுக்கப்படவுள்ள ஒரு தலைப்பின் கீழ் சுமார் 150 சொற்களைக் கொண்ட கட்டுரை அல்லது கடிதம் அல்லது கவிதை ஒன்றினை எழுதும்படி கேட்கப்படுவர்.

6) எழுத்தறிவுப் போட்டிகள் NSW தமிழ் பாடசாலைகளின் பாடத்திட்டத்தைத் தழுவியதாக அமையும். அவுஸ்திரேலிய மொழிக்கல்வி தொடர்பான அணுகுமுறையும் (approach), விடயதானமும் (contents), அடைவுகளும் (outcomes) எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானவை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.
7) எழுத்தறிவுப் போட்டிகள் மட்டுமே தேசிய மட்டத்தில் நடாத்தப்படுகின்றன. எனவே மாநில மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாணவர்களிடையே முதற் பரிசு பெறும் போட்டியாளருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.
8) **போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:**
   - ✓ நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், போட்டிகளின் நேர அட்டவணையையும் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். உங்கள் விண்ணப்பம் முழுமை பெறாவிட்டால் எம்முடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தை பூர்த்தி செய்யவும். நீங்கள் எங்களுடன் 10/07/06ற்கு முன்னர் தொடர்பு கொள்ளாதபட்சத்தில், நீங்கள் போட்டியில் தோற்றும் தகுதியை இழக்கின்றீர்கள்.
   - ✓ எழுத்தறிவுப் போட்டிகளுக்கான மாதிரி வினாக்களை இன்னமும் பெற்றுக் கொள்ளாதவர்கள், உங்கள் தமிழ்ப் பாடசாலைகளிலோ, அல்லது எமது இணையத்தளத்திலோ அவற்றைப் பெறலாம், அல்லது எம்முடன் தொடர்பு கொள்ளவும். எமது கடிதம் கிடைக்காவிட்டால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
   - ✓ போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
   - ✓ விண்ணப்பப் கட்டணத்தை($5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தை குறைக்கவும்.
   - ✓ உங்கள் மின்னஞ்சல் விபரத்தை ஏற்கனவே தராவிடின், தயவு செய்து அனுப்பி விடவும்.
9) மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.
10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார்.

எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புப் குழு, அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்**

மேலதிக விபரங்களுக்கு: Email: tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org
Tele: 0433 088 725 or 02-9758 7970